1994 ஏப்ரல் 13]

திட்டங்களையும் செயல்படுத்த முன்வருவதால், அந்தத் தன்னார்வுத் தொண்டு நிறுவனத்திற்கு நடப்பாண்டிலேயே இப்படிப்பட்ட விடுதி துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களாக இருந்தாலும் சமூகநலத்துறை இதற்கு என்று ஒரு இலக்கை வைத்திருக்கிறது. அந்த இலக்கிற்கு உட்பட்ட வகையில் அவர்கள் இருப்பார்களானால், நிச்சயமாக சமூகநலத்துறை அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 271, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

271 —

சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

**** 19487***— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: ம்ாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆண்டு ஒன்றுக்கு 2000 டன் சந்தன மரங்களை தமிழ்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசின் அனுமதி பெறவேண்டி முதன்மை வனத்துறைத் தலைவர் அரசிற்கு அனுப்பிய கருத்துரு ஒன்று அரசின் ஆயிவில் உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வினாவிற்கு விடை அளிக்கின்றபோது, கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அதனுடைய அனுமதிக்காகக் காத்து இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எனில், மைய அரசு இதுவரை ஏதேனும் 'பாசிடிவாக' பதிலை நம்முடைய அரசுக்குத் தந்திருக்கிறதா? அப்படி இல்லாதபட்சத்தில் மைய அரசை என்னென்ன வகையில் நம்முடைய அரசு வற்புறுத்த இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[*1994 ஏப்ரல் 13*

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம். 1.4.1992 முதல் மத்திய அரசு சந்தன மரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்திருக்கிறது. சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்காக உள்ள தடையை நீக்கக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். பாரதப் பிரதமரிடமிருந்து வந்த பதிலில் சந்தன மரங்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து இருக்கும் என்றும், கைவினைப் பொருட்கள் உருவில், சந்தன மரம் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது. மீண்டும் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இப்போது 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்' மூலமாகவாவது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. இன்னும் அகில இந்திய ரீதியில் மாநில வனத்துறை அமைச்சர்களுடைய மாநாடு நடைபெற இருக்கிறது, அதிலும் நாம் வலியுறுத்துவோம். எனவே புதியதாக நாம் இப்போது ஒரு கருத்துருவை உருவாக்கி, அதை மத்திய அரசுக்கு அனுப்புகின்ற முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதிக்காக எத்தனை கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தன மரம் தற்சமயம் நம்முடைய அரசின் கையிருப்பில் உள்ளது? அதே நேரத்தில் சந்தன மரமானது தமிழகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் எத்தனை ஏக்கரில் பயிரிடப்படுகிறது என்ற விவரத்தையும் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப்பதில் ஒன்றும் அவ்வளவு சுருக்கமாகச் சொல்லக்கூடியது அல்ல.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சந்தன மரங்கள், வட ஆற்காடு-அம்பேத்கார், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் கிடைக்கப்பெறுகின்றன. சுமார் 6500 ஸ்கொயர் கிலோ மீட்டர் பரப்பளவில் இது இருக்கிறது. தற்போது வனத்துறையில் சுமார் 4500 டன் சந்தன மரம் இருப்பில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி கே. மரியம் உல் ஆசியா.

1994 ஏப்ரல் 13]

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே அதிக வாசனையுள்ள சந்தன மரங்கள் நமது தமிழ் நாட்டில் இருக்கின்ற காரணத்தால், தனியார் அப்படிப்பட்ட சந்தன மரங்களைக் கடத்துவதைத் தடுப்பதற்கு ஏதுவாக இந்த சந்தன மரங்களை ஏற்றுமதி செய்வதற்கு தனி கார்ப்பொரேஷன் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதித்திருக்கின்ற காரணத்தால் தமிழக அரசால் இப்படி ஒரு தனி வாரியம் அமைப்பதற்கு வழியில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று சொன்னால், இங்கே இருக்கின்ற சந்தன மரங்களை அரசு என்ன செய்கிறது? அதை எப்படிப் பயன்படுத்துகிறது? தற்போது தமிழ்நாட்டினுடைய எல்லையிலே சந்தன எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் 5 இருக்கின்றன. அவை லாபகரமாக நல்லமுறையில் நடந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட எண்ணெய் தயாரிக்கின்ற தொழிற்சாலை அமைக்கின்ற எண்ணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது இருப்பில் இருக்கும் சந்தன மரங்கள்-ஏலத்தில் விடப்படுகின்றன. ஏலத்தில் விடுகின்ற நேரத்தில், சிலர் அதை ஏலம் எடுக்கிறார்கள். அண்மையில்கூட டிசம்பர் 1993-ல் சேலத்தில் நடைபெற்ற ஏலத்தை எடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. இதுகாறும் தமிழகத்தில் நடைபெறும் ஏலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எடுக்கவில்லை. அதுபோன்று கேரளத்தைச் சேர்ந்தவர்களும் எடுக்கவில்லை. ஆனால் இந்தச் சந்தன மரம் என்பது அதிகமான விலையிருக்கின்ற காரணத்தால் இந்த மரத்திற்கு வெளி மாநிலங்களிலும் மற்ற பல்வேறு இடங்களிலும் அதிகமான தேவை இருக்கிறது என்பதை உணர்கிறோம். ஆனால் இந்தச் சந்தன மரத்தை வெளி மாநிலங்களுக்கோ அல்லது வேறு எங்கோ எடுத்துச் செல்வதற்கு கடுமையான சட்டம் தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறது. இதைத் தொடர்ந்து கர்நாடகாவிலும் இருக்கிறது.

ஆனால் ஆந்திரா அல்லது கேரளா போன்ற மாநிலங்களில் சந்தன மரத்தைக் கடத்துவதையோ அல்லது எடுத்துச் செல்வதையோ தடை செய்வதற்கு தமிழகத்தைப்போல் கடுமையான சட்டங்கள் இல்லாத காரணத்தால் இந்தச் சட்டத்தில் இருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, இதைச் சில இடங்களில் எடுத்துச் செல்கிறார்கள் என்பதை நாங்கள் அறிகிறோம். இருந்தாலும், இதில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவேதான் மத்திய அரசைப் பொறுத்தவரையிலும் ஒரு 'யூனிபார்ம் பாலிசி' - சந்தன மரம் தமிழகத்திலே மட்டும் இருக்கிற ஒரு மிகச் சிறந்த சொத்து. இதைக் காப்பாற்றுவதில் மத்திய அரசு தனிக் கவனம் செலுத்தி - இந்தியா முழுவதற்கும் ஒரு சரியான சட்டத்தை அவர்கள் உருவாக்கவேண்டும் என்பதையும் நாங்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். மத்திய அரசு தமிழகத்தில் நாம் எப்படி சந்தன மரத்தைக் கடத்துவதைத் தடுப்பதற்கு சட்டம் வைத்திருக்கிறோமோ, அதைப் போன்ற உணர்வை இந்தியா முழுவதிலும் ஏற்படுத்துவார்களேயானால், நாம் திறம்பட சந்தன மரக் கடத்தலைத் தடுக்கமுடியும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி மறப்பது நன்றன்று என்று சொல்வதைப் போன்று எங்கள் பெரியார் மாவட்டத்தில் வீரப்பன் எங்கள் பகுதியில் பர்கூரிலும், தாளவாடியிலும்தான் முகாமிட்டு சந்தன மரங்களை சாதாரணமாக விறகினை வெட்டி லாரியில் அடுக்கிக்கொண்டு செல்வதுபோல் எடுத்துச் சென்றுகொண்டிருந்தான். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் சிறப்பு வனத்துறை காவல்படையை உருவாக்கி அங்கே உள்ள சந்தன மரங்களையெல்லாம் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலேதான் நான் நன்றியினைச் சொன்னேன். அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் சந்தன மரங்கள் ஏராளமாக கையிருப்பில் இருக்கின்ற காரணத்தாலும், அங்கே ஒரு தொழிற்சாலைக்கு ஏற்பாடு செய்து, அந்த தொழில் மூலம் ஏழை எளிய மக்கள் வாழ்வு நலம் பெற நல்ல பல திட்டங்களைச் சிறப்பான முறையிலே நடத்திக் கொண்டுவரும் இதய தெய்வம் நான் வணங்கும் கடவுள், புரட்சித் தலைவி அவர்கள், அந்தப் பகுதியிலே ஒரு சந்தனமரத் தொழிற்சாலையை ஆரம்பித்து, ஏழை எளிய மக்களுக்கு தொழில் கொடுப்பதற்கு வாய்ப்பினை நல்குவாரா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 13]

முற்பகல்: 10.30

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் ஏதாவது ஒரு தொழிற்சாலையைக் கொண்டுவர வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய அரசு சந்தன மரங்களிலிருந்து எண்ணெய் எடுப்பது போன்ற ஒரு ஆலையை உருவாக்கியதில் அது இலாபகரமாக நடைபெறவில்லை. எனவே இலாபகரமாக இல்லாத பட்சத்தில் அதை வேறு துறையாவது எடுத்து நடத்தவேண்டுமென்ற நம்முடைய வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டு யாரும் அதைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தயாராக இல்லை. இன்றைக்கு இருக்கிற சந்தன மரங்கள் விலை உயர்ந்த ஒன்று. இந்த மாதிரி தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலம் இலாபகரமாக இல்லை என்பதுதான் இதுகாறும் இருக்கிற ஒரு சாதாரண மரபாக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அதனுடைய உற்பத்தி மற்றவை குறித்து ஆராயவேண்டும். எனவே தற்போது அந்தச் சூழ்நிலை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சந்தனக் கட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ஹாண்டிகிராப்ட்ஸ் என்று சொல்லக்கூடிய வகையில், காட்சிப் பொருளாக ஆக்கி, உருவங்களாக ஆக்கி, அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இந்தத் தடை பொருந்துமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைவினைப் பொருள்கள் உருவில் சந்தன மரம் ஏற்றுமதி செய்வதற்குத் தடையேதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட ஒரு மிகச்சிறந்த தொழில் அதிபர் என்று கருதுகிறேன். அதை அவர்கள் முயன்று பார்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தன மரத்தை ஏலம் விடுகின்றபோது,

கேரள மாநிலத்திலிருந்து வந்து யாரும் எடுப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலிருந்து 100 அடி தூரத்தில், கேரள எல்லையில் 3 சந்தன ஆலைகள் இருக்கின்றன. நான்காவது சந்தன ஆலையும் இப்போது அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய அத்தனை சந்தன மரங்களையும் தமிழ்நாட்டிலிருந்து கள்ளத்தனமாகத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வனத்துறை சரியான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆலைகள் இருப்பது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஆலைகள் ஆண்டு முழுவதும் நடைபெறவில்லை. மாறாக அந்த ஆலைகளை நடத்துகிறவர்கள் பல்வேறு தொழில்களில் இருக்கிறார்கள். அவர்கள் சந்தன மரங்கள் கிடைக்கின்ற நேரத்தில் அதையும் செய்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நம்மைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதியில் செக்போஸ்ட் போன்றவைகளை வைத்து, கேரளாவிற்கு சந்தனக் கட்டைகள் கடத்துவதைத் தடுப்பதற்கு டாஸ்க் போர்ஸ்கூட அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அது அமைக்கப்பட்டு, கடுமையாக தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே அங்கேயுள்ள ஆலைகள் பயன்படுத்துகின்ற சந்தனக் கட்டைகள் என்பது இங்கேயிருந்துதான் எடுத்துச்செல்லப்படுகிறதா அல்லது இங்கேயிருந்து ஏலம் எடுத்துச் சென்ற பின்னர் அதைப் பல்வேறு நபர்களிடமிருந்து பெற்றுச் செய்கிறார்களா என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது சேலத்தில் சந்தன மரங்களை ஏலம் எடுக்க யாரும் வரவில்லையென்று கூறினார்கள். சந்தன மரத்தைக் கடத்துவது அதிகமாக இருக்கிற காரணத்தால்தான் ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. அரசாங்கம் சந்தன மரத்தைக் கடத்துவோர் மீது குண்டர்கள் சட்டம் போன்ற சட்டங்களின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, கேரளாவில் சந்தன மரங்களைக் கடத்துவதைத் தடுக்க சட்டங்கள் இல்லை என்று சொன்னார்கள். கேரளாவிலே கடுமையான சட்டம் இருக்கிறது. சந்தன மரத்தைக் கடத்தினால், அந்த லாரியை மாவட்ட வன

1994 ஏப்ரல் 13]

அதிகாரி (District Forest Officer) பறிமுதல் செய்கிறார்கள். அந்த அளவுக்கு கேரளாவிலே சட்டம் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சந்தனக் கடத்தலைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுத்து, தேங்கிக் கிடக்கிற மரங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1.4.1993 முதல் 15.11.1993 வரையில் 2,226 சந்தன மரக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு இதே நாள் வரையில் 1151 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று இக்குற்ற வழக்கில் 333 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 4,310 குற்றவாளிகள் இவற்றில் ஈடுபட்டு உள்ளார்கள் என்று தெரிய வருகிறது. 530 பேர் குண்டர்கள் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்பட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே சந்தன மரங்கள் அதிகமாக விளைகிற மாநிலம் எது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? அதேபோல் தமிழ்நாட்டில் அதிகமான சந்தன மரம் விளைகிறது என்றால் அதற்கு இந்த மண்வாசனைதான் காரணமா அல்லது வேறு காரணம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சந்தன மரம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலே தான் அதிகமாக இருக்கிறது என்பதை மிக ஆணித்தரமாகச் சொல்ல முடியும். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கடுமையான சட்டங்களும் நடவடிக்கைகளும் இதற்குக் காரணம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தை விட அதிகமாக கர்நாடகா போன்ற மாநிலங்களிலே சந்தன மரம் இருந்தது உண்டு, இன்றைக்கு அங்கே சந்தன மரங்கள் இல்லை என்பதும் நாம்தான் சந்தன மர உற்பத்தியில் 'மொனாப்பலியாக' இன்றைக்கு இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பல்வேறு மாவட்டங்களில் இயற்கையாகவே சந்தன மரங்கள் வளர்கின்றன. எனவே இயற்கைச் சூழல் என்பதுடன், மண்ணுக்கு ஏற்றவாறு அதன்

வளம், தமிழகத்திலேதான் இருக்கிறது என்பதையும், செயற்கையாக அதை உற்பத்தி செய்வதற்கு முடியவில்லை என்பதையும், இங்கே இருந்து சந்தன மரங்களை ஆஸ்திரேலியாவிற்கு எடுத்துச் சென்று பயிர் செய்து அதை வளர்ப்பதற்கு முயற்சி செய்கிற நேரத்தில் அவர்கள் தோற்றுப் போனார்கள் என்பதையும், நம்முடைய தமிழகத்திலே சிறப்பான மண் வளம் சந்தன மர வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ராஜு போன்றவர்கள் இந்த மண்வாசனையைக் கெடுத்துவிடக் கூடாது. திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே பார்த்தேன். பல்வேறு தனியார்கள் சந்தன மரம் வளர்ப்பதற்கு ஆயிரம் ரூபாய் முதலீடு செய்தால் அது கோடிக் கணக்கிலே, லட்சக் கணக்கிலே பெருகும் என்று அறிவிப்பு செய்து பலபேர் அதிலே முதலீடு செய்வதாக அறிகின்றேன். அப்படி அறிவிப்பதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சரிடத்திலே, அல்லது வன இலாகாவிடத்திலே அனுமதி வாங்கியிருக்கிறார்களா? அது பலபேரை மோசடி செய்வதாக, இரட்டிப்பு செய்வது போன்று விளம்பரப் படுத்துவதாக இருக்கிறது. பல்வேறு நபர்கள் இதிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, அதைத் தடுப்பதற்கு அல்லது இதுகுறித்து என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா? அத்தோடு அந்தியூர் பெரியசாமி அவர்கள் கேள்வி கேட்கும்போது ஒன்றைச் சொன்னார்.**

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று சந்தன மரங்கள் ஆங்காங்கே நடுவது குறித்த அறிவிப்புகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அறிவிப்புகள் எல்லாம் தேக்கு மரத் தோட்டங்கள் வளர்ப்பதற்காகத்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே தேக்கு மரத் தோட்டங்களையே நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தன மரத் தோட்டங்களாகக் கருதினார்களோ என்பது தெரியவில்லை. இதுகாறும் சந்தன மரத் தோட்டங்களை தனியார்கள் ஆங்காங்கே இப்படிப் போட்டு விளம்பரம் செய்வதாக அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சின்னசாமி, நீங்கள் சொல்லும் போது பெரியசாமி அவையினுடைய மரியாதையைக் காக்கக்கூடிய அளவில் ** என்று பேசக் கூடாது என்பதற்காகப் பேசியதை** என்று சொல்லியது தப்பு. (குறுக்கீடு)** என்பது போலச் சொல்வது தவறு. (குறுக்கீடு) இந்த அவையில் யாரையும் ** என்று பேசக்கூடாது என்பதற்காக அவர் அப்படிச் சொன்னார். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அவர் சொன்னது தேவையில்லை.

வினா எண். 272, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

272—

சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளித்தல்.

***21384-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சந்தன மரச் செடிகள் வளர்க்க மானியமும் கடன் வசதியும் அளிப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த 3 ஆண்டு காலத்திலே நாட்டிலே எந்த முதல் மந்திரியும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளையெல்லாம், மாண்புமிகு டாக்டர் புரட்சி தலைவி செய்துக் கொண்டு வருகிறார்கள். நமது அரசு ஏழை மக்களுக்காகவும் மலைவாழ் மக்களுக்காகவும் பல நல்ல திட்டங்களைச் செய்து வருகிறது. சந்தனம் என்றாலே இந்தியாவிலேயே முதல் தரமான சந்தன மரங்கள் கிடைக்கின்ற இடம் என்னுடைய திருப்பத்தூர் தொகுதியிலிருக்கும் ஜவ்வாது மலைதான். ஆகவே அங்குள்ள மக்கள் சந்தன மரச் செடிகளை வளர்க்க மானியம் அல்லது கடன் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.